செ.வெ.எண்.77 நாள்.31.03.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூக நலத்துறையின் சார்பில் 10 திருநங்கைகளுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூக நலத்துறை நிதியுதவியுடன் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியுடன் திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (31.03.2017) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு, 10 திருநங்கைகளுக்கு தலா ரூ.20 ஆயிரம் மதிப்பில் ஆக மொத்தம் ரூ.2 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். அப்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநங்கைகளுக்கு அரசின் அனைத்து திட்டங்களின் மூலமும் தேவையான வசதிகள் செய்து தரப்படுகிறது. இன்று சமூக நலத்துறையின் மூலம் 3 திருநங்கைகளுக்கு தலா ரூ.20 ஆயிரம் மதிப்பிலான கறவை மாடுகளும், 4 திருநங்கைகளுக்கு தலா ரூ.20 ஆயிரம் மதிப்பிலான நவீன தையல் இயந்திரங்களும், ஒரு திருநங்கைக்கு அரிசி வியாபாரம் செய்திட ரூ.20 ஆயிரம் மதிப்பிலான அரிசி மூட்டைகளும், 2 திருநங்கைகளுக்கு நாட்டுக் கோழி வளர்த்திட உதவித் தொகையென 10 திருநங்கைகளுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில், மானூர் ஒன்றியம், நரசிங்கநல்லூர் பகுதியில் 29 திருநங்கைகளுக்கு கூடங்குளம் சுற்றுப்பகுதி மேம்பாட்டு திட்ட உபரி நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சம் மதிப்பில் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. மேலும், திருநங்கைகள் பொருளாதார ரீதியில் சுயசார்பு நிலையினை அடைய பல்வேறு தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு, வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசின் அனைத்து திட்டங்களும், திருநங்கைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சமூக அலுவலர் திருமதி.முத்துலெட்சுமி, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், உதவி இயக்குநர் திரு.இராதாகிருஷ்ணன், கால்நடை மருத்துவர் திரு.செந்தூர்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.